**செய்தி வெளியீடு எண்: 835** **நாள்: 14.11.2018**

## செய்தி வெளியீடு

**BHIM**

இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வரும் நிலையில், இந்திய குடிமக்கள் அனைவருக்கும் தடையற்ற டிஜிட்டல் கட்டணத்தை வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. டிஜிட்டல் மின்னணு பரிவர்த்தனைகளில் மூலம், மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் ரூ.2500 கோடி அளவிற்கான இலக்கை அடைய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் முயற்சி செய்கிறது. 1st ஜனவரி 2018 முதல் இரண்டு ஆண்டுகளுக்கு, ரூ 2000/- மற்றும் அதற்கு குறைவான, டெபிட் கார்டு/ BHIM ஆப்/ UPI ஆப்/ ஆதார்-பே மூலமான பரிவர்த்தனைகளுக்கு வணிக தள்ளுபடி விகிதம் (MDR) பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**BHIM பயன்பாடு பற்றி**:

National Payments Corporation of India (NPCI) மூலம் உருவாக்கப்பட்ட இந்த BHIM ஆப் ஆனது வங்கிகள் மூலம் வழங்கப்படும் அனைத்து BHIM சார்ந்த சேவைகளின் ஒரு தொகுப்பு ஆகும். ஐபோன்/அண்ட்ராய்டு பயனர்கள் BHIM பயன்பாட்டை பதிவிறக்க முடியும். பயன்பாட்டை பதிவிறக்கம் முறை, UPI பின், UPI ஐடி உருவாக்கத்தின் மூலம் இந்த செயலியினை பயன்பாட்டுக்குக் கொண்டுவரலாம்.

BHIM அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட கொடுப்பனவு இடைமுகம் (யூனிபைட் பேமண்ட் இன்டர்பேஸ்) என்பது ஒரு ஸ்மார்ட்போன் பயன்படுத்தி எந்த இரண்டு வங்கி கணக்குகளுக்கும் இடையே பண பரிமாற்ற நிகழ்த்த அனுமதிக்கும் அமைப்பாகும். BHIM ஆனது வாடிக்கையாளரை நேரடியாக ஒரு வங்கி கணக்கில் இருந்து கடன் அட்டை விவரங்கள், குறியீடு, அல்லது நெட் பேங்கிங் / பணப்பை

கடவுச்சொற்கள் என்ற எந்த தொந்தரவும் இல்லாமல் வெவ்வேறு வியாபாரிகளுக்கு வெவ்வேறு வங்கி கணக்குகளில் இருந்து ஆன்லைன் மற்றும் ஆப்லைன் மூலம் பணப்பரிமாற்றம் செய்ய உதவும் என்பதும் குறிப்பிடத்தக்கது. அப்படியான BHIM ஆப்பை பயன்படுத்துவது எப்படி என்பதை பற்றிய படிப்படியான வழிமுறைகள் பதிவிறக்கம் ஆண்ட்ராய்டு பயனர்கள் 'பீம்' (BHIM) என்று டைப் செய்து ப்ளே ஸ்டோரில் தேடுவதின் மூலம் இந்த ஆப்பை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். சரிபார்ப்பு பணி இப்போது பயன்பாட்டை நிறுவி மற்றும் உங்கள் மொழி தேர்வை நிகழ்த்தவும். பயன்பாடு ஒரு எஸ்எம்எஸ் மூலம் உங்கள் தொலைபேசி எண்ணை சரிபார்க்க கேட்கும். கிளிக் செய்து சரிபார்ப்பு பணி நிறைவாகும் வரை காத்திருக்கவும். சரிபார்ப்பு முடிந்ததும், உங்களின் நான்கு இலக்க கடவுக்குறியீட்டை உள்ளீடவும். வங்கி தேர்வு பாஸ்கோட் அமைக்கப்பட்ட பின்னர், ஆப் ஆனது உங்கள் வங்கி தேர்வு செய்ய கேட்கும். வங்கி தேர்வு முறை நிகழ்த்தியதும்ஆப் ஆனது தானாக உங்கள் தொலைபேசி எண்ணைப் பயன்படுத்தி உங்கள் விவரங்களை எடுத்துக்கொள்ளும். பின்னர் உங்களின் பெரும்பாலான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் முதன்மை வங்கி கணக்கு தேர்ந்தெடுக்கவும். மூன்று ஆப்ஷன் இந்த ஆப் ஆனது மூன்று ஆப்ஷன்களை உங்களுக்கு காட்டும் :

சென்ட், ரெக்குவஸ்ட், ஸ்கேன்/பே… பரிவர்த்தனைகள் சரிபார்க்கப்பட்ட தொலைபேசி எண்களுக்கு இடையே மட்டுமே சாத்தியம். சென்ட் யாருக்காவது பணம் அனுப்ப வேண்டுமென்றால் அவர்களின் தொலைபேசி எண் மற்றும் பணத்தின் அளவு ஆகியவைகளை பதிவிடவும். பின்னர் ஆப் உங்களின் எம்பின் (MPIN) கேட்கும், அதாவது ஒரு மொபைல் பரிவர்த்தனை அங்கீகரிக்கும் ஒரு நான்கு அல்லது ஆறு ஐக்கிய குறீயீடு கேட்கும். ரெக்குவஸ்ட் அதேபோல், நீங்கள்

யாரிடமாவது பணம் தேவை என்ற கோரிக்கையை கூட உங்கள் தொலைபேசி எண்ணை பயன்படுத்தி கோரலாம்.

**<u>ஸ்கேன்/ பே</u>**

மூன்றாவது விருப்பமான ஸ்கேன் மற்றும் பே மூலம் பயனர்கள் ஒரு க்யூஆர் (QR) குறியீடு (அதாவது ஒரு ஸ்மார்ட்போன் அல்லது ஒரு டாப்ளெட் மூலம் குறியாக்க நீக்கம் செய்யக்கூடிய ஒரு இரு பரிமாண கருப்பு மற்றும் வெள்ளை பார்கோடு) பயன்படுத்தி பணம் பரிமாற்றம் செய்ய அனுமதிக்கிறது. ஒவ்வொரு தொலைபேசி எண்ணிற்கும் ஹோம் திரையில் சுயவிவரத்தின் கீழ் அணுக முடியும் வண்ணம் ஒரு க்யூஆர் குறியீடு ஒதுக்கப்பட்டிருக்கும்.

இது தொடர்பான கூடுதல் தகவல்களை https://www.bhimupi.org.in/ என்ற இணையத் தள முகவரில் தெரிந்துகொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**